முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 641**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.07.2021, வியாழக்கிழமை

1. தர்மத்தின் காவலனே அரங்கா போற்றி
தரணிகாக்க வந்தநல் தேசிகா போற்றி
கர்மவினை நீக்கி உலகோரை மீட்க
கந்தவேலன் என்வடிவாகவந்த குருராஜனேபோற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரைஆசி
ஆற்றல்பட அரங்கன் தொண்டர்கள் மூலமே
மாற்றங்கள் இந்த உலகில் நடந்தேறும் மக்களை காக்கின்ற ஞான ஆட்சியாக மலரும்
3. மலருகின்ற இந்த வாய்ப்பு தந்து சுப்ரமணியப்பெருமான் யானும்
மகத்துவத்தை அரங்கன் வழி நடத்திவர
வளருகின்ற இந்த சமூகம் ஞானவழியில்
வல்லமைபெற்று ஞானசித்தர் ஆட்சிகாலமாக மாற
4. மாறவே உலகோர் சுத்தசன்மார்க்க நெறி ஏற்று
மாதர்மத்தை கைக்கொண்டு உலகமெங்கும்பரப்பி ஆற்றல்பட அரங்கன் தொடர்புவழி தொடர்ந்துவர
அகிலமே ஆறுமுகப்பெருமான் என் அருளோடு ஏற்றம் காணும் எல்லா துறைவகையும் இனிதே வளர்ந்து
உலகமெங்கும் பசி பிணி கொடுமையில்லாத உரைத்திடுவேன் பாதுகாப்பு மிக்க சூழலாக
5. ஆகவே இந்த கலியுகம் மாற்றம் கண்டு
அரங்கன் கொள்கைவழியும் தர்மவழியும்
யுகமே ஞானயுகமாற்றமாக காணக்கூடும்
உயர்வான அரங்கன் ஆசிபெற்ற மக்கள் மூலமே
6. மூலமாக உலகில் இந்த மாற்றம்
முழுமைபட ஞான ஆட்சிகாலமாக மாறி
வழுவான தொண்டர்படைகள் வழியே
வையகம் பேரிடரை வென்று பெரும்பாதுகாப்பு பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–